## ரூ.762.30 கோடியில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில்

# தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 10-

22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.762.30 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2023) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் ஓரகடத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 762 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்து மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளி களில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவி களுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் ஐந்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Cards) வழங்கி, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழ் வழி பாடப்புத்தகங்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை – டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ஒரகடத்தில் நிறுவியுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்து தொழில்நுட்ப இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ.வீரராகவ ராவ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், டாடா சன்ஸ் குழும தலைவர் என்.சந்திரசேகரன், தலைமை செயல் அலுவலர் வாரன் ஹாரிஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**78 தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கப்படுகிறது!**

தமிழ்நாட்டில் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கும், இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான திறன்மிக்க மனிதவளத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs) முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 330 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஃபிட்டர், டர்னர், மெசினிஸ்ட், எலக்ட்ரிசியன், வெல்டர், ஏசி மெக்கானிக் போன்ற 78 தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 2021-22ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், ஐ.டி.ஐ. முடித்துச் செல்லும் பயிற்சியாளர்கள், தொழில் நிறுவனங்களில் உடனடி வேலைவாய்ப்பு பெறும் வகையில், பயிற்சியின் தரம் உயர்த்திட, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையும், மாறிவரும் தொழிற்சாலைகளின் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிட முன்னணி தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாறி வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப எதிர்கால வேலைவாய்ப்புகளை தமிழ்நாட்டின் இளைஞர்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கில், தமிழ்நாடு அரசு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை 2877 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் தொழில் 4.0 தரத்திலான திறன் பயிற்சிகளை வழங்கும் வகையில், தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இது தமிழ்நாட்டின் தொழிற்பயிற்சி நிலையங்களின் வளர்ச்சியில் ஒரு சிறப்பு மிக்க நிகழ்வாகும். இந்த மையங்களில், டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட்., நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் மென்பொருட்கள் நிறுவப்பட்டு, ரோபோட்டிக்ஸ், இண்டஸ்ட்டிரியல் ஆட்டோமேஷன், மேனுஃபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல், அட்வான்ஸ்டு மேனுஃபேக்சரிங், மெக்கானிக் மின்சார வாகனங்கள், இண்டர்நெட் ஆஃப் திங்க்ஸ், அடிட்டிவ் மேனுஃபேக்சரிங், இண்டஸ்ட்டிரியல் பெயிண்டிங், அட்வான்ஸ்டு பிளம்பிங், அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் டெக்னாலஜி போன்ற நவீன திறன் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளன. டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமையிலான 20 சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 87.5 : 12.5 என்ற விகிதத்தில் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனமும், தமிழ்நாடு அரசும் முதலீடு செய்து இத்திட்டத்தை செயல்படுத்தும்.

அதன்படி, 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 30.06.2023க்கு முன்னதாக தொழில்நுட்ப மையங்கள் உருவாக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு, டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் 14.6.2022 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதில், முதற்கட்டப் பணிகள் முடிக்கப்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம் - ஓரகடம், செங்கல்பட்டு மாவட்டம் - செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மாவட்டம் ராணிப்பேட்டை, அரக்கோணம், விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனம், கடலூர் மாவட்டம் - கடலூர், சிதம்பரம், ஈரோடு மாவட்டம் - ஈரோடு, திருப்பூர் மாவட்டம் - தாராபுரம், நாமக்கல் மாவட்டம் நாமக்கல், சேலம் மாவட்டம் - சேலம், மதுரை மாவட்டம் - மதுரை, தேனி மாவட்டம் - தேனி, போடி, திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல், தூத்துக்குடி மாவட்டம் - தூத்துக்குடி, திருச்சி மாவட்டம் - திருச்சி, மணிகண்டம், விருதுநகர் மாவட்டம் - சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் - திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 762 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மையங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் திறந்து வைத்தார்.

**அதிநவீன தொழில்நுட்பங்களை கற்று பயனடையலாம்!**

இதன்மூலம், அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு வருடமும் 5140 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு பயனடைவர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த வழக்கொழிந்த பழைய தொழிற்பிரிவுகள் நீக்கப்பட்டு புதிய தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 10,040 மாணவர்கள் இந்த 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெறுவர். இதுதவிர, பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு படித்தோரும் குறு, சிறு நடுத்தர தொழிற்சாலைகளில் பணிபுரிவோரும் இங்கு வழங்கப்படக் கூடிய குறுகிய கால பயிற்சிகளில் சேர்ந்து தற்போதைய தொழில் துறைக்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்பங்களை கற்று பயனடையலாம்.

மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் பயன்படுத்தும் பாடப் புத்தகங்கள் இதுவரை ஆங்கில மொழியில் இருந்து வந்தது. 2022-2023ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பிற்கிணங்க, திறன் பயிற்சிகளை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் ரூ.6.80 கோடி செலவில் தமிழில் பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, தமிழில் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, ஜோசப் சாமுவேல், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ.வீரராகவ ராவ், சிப்காட் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், டாடா குழும தலைவர் என்.சந்திரசேகரன், தலைமை செயல் அலுவலர் வாரன் ஹாரிஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், காணொலி காட்சி வாயிலாக மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் புதிதாக கட்டப்பட்ட மாவட்ட கழக அலுவலகம், தளபதியார் அரங்கத்தை கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான கே.என். நேரு கலந்து கொண்டு மாவட்ட அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாவட்ட கழக செயலாளர்கள் டி.எம்.செல்வகணபதி, ஆர்.ராஜேந்திரன். எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் (துஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், அரியலூர்) காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் தலைமையில் வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல.சுப்ரமணியன், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜய ராஜ்குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.பிரபாகரன், கூட்டுறவுத்துறை சங்கங்களின் பதிவாளர் மரு.என்.சுப்பையன், மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப் தலைமையில் நேற்று முன்தினம் (08.06.2023) நடைபெற்றது. மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் எஸ். கல்யாணசுத்தரம், தலைவர் தாட்கோ மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி), நிவேதா எம் முருகன் (பூம்புகார்), அஙூர் ஷாநவாஸ் (நாகப்பட்டினம்), வி.பி. நாகை மாலி (கீழவேளூர்), சங்கபிரதிநிதிகள், விவசாயிகள், அலுவலர்கள் உடன் உள்ளனர்.

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் நிகழ்ச்சிகள்!

*தூத்துக்குடி, ஜூன். 10-*

*தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதியும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமானபி. கீதாஜீவனும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் விபரம்:-*

**நாள் : 10.6.2023**

**சனிக்கிழமை**

*காலை 10.00 மணி - கிழவிபட்டி - கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் கிழவிபட்டி கிராமத்தில் மக்கள் குறை கேட்டல்.*

*காலை 10.30 மணி - கரிசல்குளம் - கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் கரிசல்குளம் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் பயணிகள் நிழற்குடை அடிக்கல் நாட்டல் மற்றும் மக்கள் குறை கேட்டல்.*

*காலை 11.00 மணி - துறையூர் - கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் துறையூர் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் பயணிகள் நிழற்குடை அடிக்கல் நாட்டல் மற்றும் மக்கள் குறை கேட்டல்.*

*காலை 11.30 மணி - கோவில்பட்டி - கோவில்பட்டி நகரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் திறப்பு விழா.*

*மதியம் 12.00 மணி - கோவில்பட்டி - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கோவில்பட்டி நகர தி.மு.க. சார்பில் நடைபெறும் அன்னதானத்தை தொடங்கி வைத்தல்.*

*மாலை 5.00 மணி - தூத்துக்குடி சின்ன கோவில் வளாகம் - ஆர்.சி. டயோசீசன் நூற்றாண்டு விழா நிகழ்ச்சி*

*மேற்கண்டவாறு நிகழ்ச்சிகளில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அமைச்சர் பி.கீதா ஜீவன் கலந்துகொள்கின்றனர்.*

# பெண்ணுரிமைக் காவலர் கலைஞர்!

தன் 18 வயதில் பெண்களின் உயர்விற்கு உரிமைக்கு குரல் கொடுத்தவர் கலைஞர்.

அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு 8 ஆவது இதழில்(26.02.1942)

“ இளமை பலி “ கட்டுரை வயோதிகக் கணவனை மணந்து அக்கிழவனையும் பறிகொடுத்து, விதவையான இளமங்கையின் சோக நிலையினை சித்தரிப்பதே ‘இளமைப் பலி’ கட்டுரையாகும்.

மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்யும்போது, கணவனை இழந்த மனைவி, மறுமணம் ஏன் செய்யக்கூடாது ? என்று பெண்ணுக்காக உரிமைக் குரல் கொடுக்கிறார் கலைஞர் .....



மறுமணம் தான் உண்டா ?
மங்கை நல்லாள் இன்பமுற !
சீ என்று இகழப் பட்டாளே அச்சீரிள நங்கை !

அந்தோ ! நாட்டினரே !
இன்னுமா உறங்குகின்றீர் ?
பெண்களின் ஓலத்தை கேட்டிலீரோ ?

“ கைம்மை’ கொடுமை கண்டு கலங்கிலீரோ?
விதவைப் பட்டத்தை விரும்பி அளிக்கின்றீரே!
மனைவி இறந்தால் மறுதாரம் மணம்புரியும்
நீங்கள் மங்கையரின்
மறுமணத்தை வெறுப்பது நன்றா ?

ஏ தமிழா ! பகுத்தறிவு எங்கேபோய்
பதுங்கிக் கொண்டது?
பெண்குலத்தின் கதியை
நீ ஏன் கண்டு கொள்ள வில்லை ?
எத்தனை நாளைக்கு நீ
அடிமையாக வாழப் போகிறாய் ?
இன்னும் எத்தனை நாளைக்கு
சுயமரியாதை யற்று வாழப் போகிறாய் ?
எத்தனை நாளைக்கு
மூட வைதீகத்தில் உழலப் போகிறாய் ?

ஐவருக்கும் தேவி அழியாப் பத்தினி என்றால்
ஆம் என்று தலை அசைக்கிறாய்.
அது எப்படி என்று கேட்கும்
பகுத்தறிவாதியை நாத்திகன் என்கிறாய்!
ஏ வீரப் புதல்வா!
நிமிர்ந்து பார் மேனாடுகளை !
அங்கு தழைத்தோங்கி நிற்கிறது
பெண்களின் உரிமை !
அதனால் அடைகின்றன மேன்மை !

ஆகவே செந்தமிழ்ச் செல்வா !
மங்கையர்தாம் நம் நாட்டின்
பொக்கிஷம் என்பதை மறவாதே !
அவர்கள் வாழ்வைக் கெடுக்காதே !
மறுமணத்தை மறுத்து அவர்கள்
இளமையை பலியிடாதே !

**...பெண்ணுரிமைக் காவலர் கலைஞர்..**

( அன்றைய பெண் சமுதாயம் சுமார் எண்பது ஆண்டுகட்கு முன் இருந்த அவலநிலையை எடுத்துக் காட்டும் இக்கட்டுரை இன்றைய இளைய சமுதாயம் அறிந்து கொள்ள பெருந்துணை புரியும்)

**கேவிஆர்**